©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 290] CHENNAI, MONDAY, AUGUST 29, 2011
Aavani 12, Thiruvalluvar Aandu–2042

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை.**

**புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், வாளரமாணிக்கம் ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை.**

*[ந.க. எண் 3267/2009/அ3(ஊ.ரா.).]*

**No. VI(2)/427(g)/2011.**

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், வாளரமாணிக்கம் ஊராட்சித் தலைவர் திரு. கை. கருப்பையா (என்ற) காசிராஜன் என்பவர் ஊராட்சியில் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருப்பதுடன் ஊராட்சி நிதியில் விதிமுறைகளை பின்பற்றாமல் மிகைச்செலவினம் மேற்கொண்டு அதன்மூலம் ஊராட்சி நிதிக்கு நிதியிழப்பு ஏற்படுத்திய காரணங்களுக்காகவும் ஊராட்சி வரிவசூலில் முறைகேடுகள் செய்தும், ஊராட்சி நிதியை கையாடல் செய்தும், இவர் தொடர்ந்து ஊராட்சித் தலைவராக செயல்பட்டால் ஊராட்சி நிதிக்கு பெருமளவு நிதியிழப்பு ஏற்படுத்துவார் என்பதுடன் தனது ஊராட்சித் தலைவர் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வார் என்பதை கருத்தில் கொண்டும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு 11ல் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தி வாளரமாணிக்கம் ஊராட்சித் தலைவர் திரு. கை. கருப்பையா (என்ற) காசிராஜன் என்பவரை ஊராட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து இதன்மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)ன்கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

புதுக்கோட்டை,
**2011 ஆகஸ்ட் 27.**

**ப. மகேஸ்வரி,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-2 Ex. (290)